பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

21 12 2024 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா – குவைத் இடையேயான நல்லுறவு வரலாற்று ரீதியிலானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் கூட்டம் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் தற்போது ஜெய்சால்மரில் நடைபெற்று வருகிறது.
- தமிழகத்திற்கு கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 22 ரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- உலக தியான தினம் முதல் முறையாக இன்று கொண்டாடப்படுகிறது.
- ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Asmita Dhone வெண்கலப்பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப்பயணமாக இன்று குவைத் புறப்பட்டு சென்றார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த பயணம் அந்நாட்டுடனான உறவை மேலும் வலுப்படுத்திட உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவு வரலாற்று ரீதியிலான தொடர்புடையது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பயணத்தின்போது, அந்நாட்டு இளவரசர் மற்றும் பிரதமருடன் நடத்தவுள்ள பேச்சுக்களை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குவைத்தில் உள்ள இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடவுள்ளதையும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான நட்புணர்வை வலுப்படுத்துவதில் இந்திய வம்சாவளியினருக்கான பங்கு இன்றியமையாதது என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் கூட்டம் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் தற்போது நடைபெற்று வருகிறது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் நடைபெற்றுவரும் இக்கூட்டத்தில், சுகாதார காப்பீடு மற்றும் உணவு விநியோக சேவைக்கான வரி விகிதங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஆயுள் மற்றும் சுகாதார காப்பீட்டுத் திட்டங்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரியை குறைப்பது குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட உள்ளது.

உயர்தர கைக்கடிகாரங்கள், காலணி மற்றும் ஆயத்த ஆடைகளுக்கான வரியை உயர்த்துவது குறித்தும் இதில் விவாதிக்கப்பட உள்ளது.

விமான எரிபொருளை சரக்கு மறறும் சேவை வரி விதிப்பின்கீழ் கொண்டு வருவது குறித்து இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<>>>>>

விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், வேளாண் விளைப்பொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக கூறியுள்ளார்.

கொப்பரைத் தேங்காய் கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை கொள்கைக்கு மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்துள்ளதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்காக விவசாயகளின் சார்பில் பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்திற்கு கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 22 ரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

பத்து புதிய வழித்தடங்கள், மூன்று அகல ரயில்பாதை அமைக்கும் பணிகள், ஒன்பது இரட்டை பாதை அமைக்கும் பணிகள் இதில் அடங்கும் என்று ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டங்கள் 33 ஆயிரத்து 467 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2 ஆயிரத்து 587 கிலோமீட்டர் தொலைவிற்கு இதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

பாரத் நெட் திட்டத்தின்கீழ், இதுவரை 2 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துகள் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

ஊரகப்பகுதிகளில் அதிவிரைவு இணையதள சேவையை வழங்கும் நோக்கில் 2011-ஆம் ஆண்டு இந்த திட்டம் தொடங்கப்பட்டதாக தொலைத்தொடர்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டத்தின்கீழ் சிறு கிராமங்களுக்கும் இணையதள சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான திருத்தியமைக்கப்பட்ட திட்டம் ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 579 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

நாட்டின் வனப்பரப்பு குறித்த அறிக்கையை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் இன்று டேராடூனில் வெளியிட்டார்.

1987-ஆம் ஆண்டு முதல் இரண்டாண்டுக்கு ஒருமுறை இந்த அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் 18-ஆவது முறையாக இந்த அறிக்கையை திரு புபேந்தர் யாதவ் வெளியிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

உலக தியான தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், நாட்டு மக்கள் அனைவரும் தியான பயிற்சி மேற்கொள்வதை தினசரி நடவடிக்கைகளில் ஒன்றாக பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான வலுவான சக்தி தியானம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐ நா சார்பில் அறிவிக்கப்பட்டு முதல் முறையாக கொண்டாடப்படும் இந்நாளையொட்டி, நியூயார்க்கில் உள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 600-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

“உலகளாவிய அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு தியானம்” என்ற கருப்பொருளுடன் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

இதில், சிறப்பு விருந்தினராக பங்கேற்ற ஆன்மிக குரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் முக்கிய உரையாற்றினார்.

தற்போதைய சூழலில் தியானம் என்பது அனைவருக்கும் அவசியமாகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

மன நலனை ஆரோக்கியமாக வைத்திருப்பதில் தியானம் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மன அழுத்தத்தை குறைக்கவும் இது உதவிடும் என்று அவர் கூறினார்.

சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதை தடுக்கவும் தியானம் உதவிடும் என்று ரவிசங்கர் கூறினார்.

இதற்கிடையே, மனதினை மனதை கொண்டே ஆராயும் பயிற்சியே தியானம் என்று திருத்துறைப்பூண்டியை அடுத்த பிரிஞ்சிமுலையை சேர்ந்த யோகா பயிற்சியாளர் ரமேஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - ரமேஷ் - 51 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

மலேரியா பாதிப்பை குறைப்பதில் இந்தியா பெரிய அளவில் வெற்றிபெற்றிருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுகுறித்த புள்ளிவிவரங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது 69 சதவீதம் அளவிற்கு மலேரியா பாதிப்பு குறைந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மலேரியாவால் ஏற்படும் உயிரிழப்புகளும் 68 சதவீதம் அளவிற்கு குறைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் முன்னாள் படை வீரர்களின் ஓய்வூதியம் தொடர்பான குறைகளை நிவர்த்தி செய்வதற்கான சிறப்பு முகாம் வேலூர் மாவட்டம் காட்பாடியில் இன்று தொடங்கியது.

மாநில ஆளுநர் திரு ஆர் என் ரவி இந்த முகாமினை தொடங்கிவைத்து, ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான ஓய்வூதியப்பலன்களை முன்னாள் படை வீரர்களுக்கு வழங்கினார்.

<<<<<<>>>>>

இலங்கை கடற்கொள்ளையர்கள் தமிழக மீனவர்கள் மீது நடத்திய தாக்குதலில் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

நாகை மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் கோடியக்கரைக்கு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது இலங்கை கடற்கொள்ளையர்கள் இந்த தாக்குதலை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

கனடாவில் அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

எட்டு பேர் புதிய அமைச்சர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

அந்நாட்டு துணை பிரதமர் உட்பட அமைச்சர்கள் சிலர் ராஜினாமா செய்ததையடுத்து, இந்த அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Asmita Dhone வெண்கலப்பதக்கம் வென்றார்.

தோஹாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 49 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியின் மகளிர் ஜூனியர் பிரிவில் Payal இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றார்.

<<<<<>>>>>

ஆசிய படகு சாம்பியன் போட்டியில் இந்தியாவின் விஷ்ணு சரவணன் வெண்கலப்பதக்கம் வென்றார்.

சீனாவின் Hainan-ல் நடைபெற்ற இப்போட்டியில், ஆடவர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<<>>>>>